# எப்போதும் நான் உங்கள் வீட்டுப் பிள்ளை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒரு முறை நான் வந்துவிடுவேன். வரவில்லை என்று ஒரு நாளைக்கு ஓய்வு எடுக்கலாம் என்று நினைத்தால், சேகர்பாபு அவர்கள் என்னை விடமாட்டார். ஒரு பட்டியலுடன் வந்துவிடுவார். அவர் வருவதற்கு முன்பு, Whats appல் பட்டியலை அனுப்பிவிடுவார். ஏனென்றால், திடீரென்று வழங்கும்போது நான் அதிர்ச்சி ஆகிவிடக் கூடாது என்று மிகவும் சாமர்த்தியமாக அந்த பட்டியலை அனுப்பிவிடுவார். அதில் 10 பட்டியலாவது நிச்சயமாக இருக்கும் - 2 அடிக்கல் நாட்டு விழா இருக்கும் - 2 திறப்பு விழா இருக்கும் - 2 கட்சி நிகழ்ச்சி இருக்கும் இப்படி ஒரு பட்டியல் போட்டு வழங்கிவிடுவார். இப்படி வழங்கி, அந்த நிகழ்ச்சிக்கு வந்தால்தான் எனக்கு ஒரு திருப்தி ஏற்படும். 10 நாட்களுக்கு ஒரு முறை வந்தால் தான் எனக்கு உள்ளபடியே முழு திருப்தி உண்டாகும்.

என்னதான் நான் முதலமைச்சராக இருந்து பல மாவட்டங்களுக்கு சுற்றுப்பயணத்தை நடத்தி, பல அரசு நிகழ்ச்சிகள், கட்சி நிகழ்ச்சிகள் அல்லது சில பொது நிகழ்ச்சிகளுக்குச் சென்று பல வரவேற்புரைகளை தருகின்றபோது, அதில் எனக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சியை விட, இந்த கொளத்தூருக்கு நீங்கள் தருகின்ற வரவேற்பில் தான் அதிக மகிழ்ச்சி ஏற்படுவதுண்டு. இப்போது கூட என்னை காரில் அழைத்துக் கொண்டு வருகின்றபோது மாவட்டச் செயலாளரை துவக்கத்திலேயே கேட்டேன் - இருபுறமும் சாலையில் மக்கள் நிற்கிறார்களே, இளைஞர்கள், மகளிர், தாய்மார்கள் நின்று வரவேற்பு தந்து கொண்டிருக்கிறார்கள் - இறங்கி விடவா? என்று கேட்டேன். அருகில் சென்ற பிறகு இறங்கிக் கொள்ளலாம் என்று சொன்னார். நேரத்தின் அருமை கருதி சொன்னாரா என்று தெரியவில்லை - இன்றைக்கு கூட பேசவில்லை, ஏதோ தொண்டை சரியில்லை என்று நினைக்கிறேன். உடல்நலம் பாதிக்கப்பட்டிருக்கிறார். அதுவும் இருக்கலாம் - இருந்தாலும் பாதி தூரம் வந்தபிறகு அவரிடம் சொல்லாமலே நான் காரை விட்டு இறங்கிவிட்டேன்.

உங்களைப் பார்க்கின்றபோது, என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை - தானாகவே இறங்கிவிடுகிறேன் - அது தான் விஷயம் வேறொன்றுமில்லை. எப்போதுமே, நான் அடிக்கடிசொல்வதுண்டு. இந்தத் தொகுதியைப் பொறுத்த வரைக்கும், ஏதோ முதலமைச்சராகவோ மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினராக மட்டுமல்லை, ஏற்கனவே இருந்த எதிர்க்கட்சித் தலைவராக மட்டுமல்ல, ஏற்கனவே இருந்த மேயராக மட்டுமல்ல, எப்போதும் உங்கள் வீட்டுப் பிள்ளையாக உங்கள் செல்லப்பிள்ளையாக - குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் ஒரு நல்ல பிள்ளையாக இருக்க வேண்டும் என்பதில் நான் மகிழ்ச்சி அடைவதுண்டு. அப்படிதான் இருக்கிறேன்; நான் நம்புகிறேன்; நீங்களும் அந்த நம்பிக்கையோடு இருப்பீர்கள் என்று எனக்கு அந்த எண்ணம் உண்டு.

இந்தத் தொகுதியில் நாம் ஏற்படுத்தி வழங்கியிருக்கக் கூடிய திட்டங்களை பார்க்கின்ற போது, இது திராவிட மாடல் ஆட்சியின் திட்டம் என்று இன்றைக்கு மட்டுமல்ல, என்றைக்கும் அது மக்களிடத்தில் பேசக்கூடிய, மக்களிடத்தில் பதியக்கூடிய அளவிற்கு பல திட்டங்களை நாம் இந்த தொகுதிக்கு ஆற்றியிருக்கிறோம்.

### சிறப்பான பெரியார் அரசு மருத்துவமனை!

எடுத்துக்காட்டிற்கு சொல்ல வேண்டும் என்று சொன்னால், கொரோனா ஏற்பட்ட போது நாம் எதிர்க்கட்சியில் இருந்தோம் கொரோனா காலகட்டத்திற்கு பிறகு, பணிச் சூழல் பெருமளவில் மாறிவிட்டது! குறிப்பாக, ஐ.டி. துறையில் வேலை செய்பவர்கள் Work from Home செய்கிறார்கள். பல தொழில்முனைவோர் உருவாகியிருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் Office Space வேண்டும் என்று சிந்தித்து தான் நாம் உருவாக்கியிருக்கும் திட்டம் தான் "முதல்வர் படைப்பகம்"!

அடுத்து, கொளத்தூர் தொகுதிக்கு மட்டுமல்ல இதனை சுற்றியிருக்கக்கூடிய பல்வேறு பகுதிகள் - மாதவரம் பார்க்கிறோம் - வடசென்னையில் இருக்கக்கூடிய பல பகுதிகளை பார்க்கிறோம் - இன்றைக்கு அரசு மருத்துவனைகளை எடுத்துக் கொண்டால், ராஜீவ்காந்தி அரசு மருத்துவனை, ஸ்டான்லி அரசு மருத்துவமனை - இங்கெல்லாம் கூட்டம் நிரம்பி வழிகிறது. அதனால் அந்த கூட்டத்தை ஓரளவு குறைக்கவேண்டும் என்பதற்காக, இங்கே ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருந்த பெரியார் அரசு மருத்துவமனையில் தரத்தை உயர்த்தவேண்டும் என்று எளிதில் அணுகும் அளவிற்கு மருத்துவம் கிடைக்க வேண்டும் என்று திட்டமிட்டு ஒரு பெரிய மருத்துவமனையை உருவாக்கி ஸ்டான்லியை விட, ராஜீவ்காந்தி மருத்துவமனையை விட, கிண்டியில் அமைந்திருக்கக் கூடிய அரசு மருத்துமனையை விட, சிறப்பான மருத்துவமனையில் ஒன்றாக இன்றைக்கு நம்முடைய பெரியார் அரசு மருத்துவமனை விளங்கிக் கொண்டிருக்கிறது!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜம்புலிங்கம் சாலையில் 25.72 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையை திறந்து வைத்து, 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசைப் பொருட்களை வழங்கி மணமக்களை வாழ்த்தினார்.

### கொளத்தூர் என்றாலே வண்ண மீன்கள்தான்!

அடுத்து, கொளத்தூர் என்று சொன்னாலே வண்ண மீன்கள்தான் நமக்கு நினைவிற்கு வரும்! நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, வாக்காளர்களை சந்திக்க வந்த போது வண்ணமீன் தொழில் செய்து கொண்டிருந்த தோழர்கள், தாய்மார்கள் அவர்களுடைய குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் இதற்கு ஏதாவது விடிவுகாலத்தை ஏற்படுத்த வேண்டும் - இதற்கு வசதிகள் செய்து தரவேண்டும் - எங்களுக்கு அங்காடிகள் கட்டித் தரவேண்டும் என்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அதில் பல சட்ட சிக்கல்கள் எல்லாம் இருந்தது. அந்த சட்ட சிக்கல்களை எல்லாம் நம்முடைய சேகர்பாபு அவர்கள் முன்னின்று, ஏதோ ஒரு துறை மட்டுமல்ல, பல துறைகள் உண்டு - வீட்டுவசதி வாரியம், மீன்வளத் துறை, சிம்டீஏ, மாநகராட்சி ஆகிய அனைத்துத் துறைகளுடன் கலந்து பேசி, அதை ஒழுங்குபடுத்தி, முறைப்படுத்தி, இன்றைக்கு வண்ண மீன்களை பெறுவதற்காக வரக்கூடியவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் உருவாக்கியிருக்கும் ஒரு மிகப் பெரிய, வெளிநாட்டில் கூட இப்படியொரு மையம் இருக்குமா? என்று சந்தேகம் வரக்கூடிய அளவிற்கு அந்த வர்த்தக மையத்தை நாம் உருவாக்கி இருக்கிறோம்.

> என்னுடைய வெற்றிக்குப் பின்னாலும் என்னுடைய மனைவி தான் - நான் மட்டுமல்ல, சேகர்பாபுவாக இருந்தாலும் சரி, நேருவாக இருந்தாலும் சரி, இங்கு இருக்கக்கூடிய நீங்களாக இருந்தாலும் சரி.
>
> ஓராண்டு காலம் நான் மிசாவில் இருந்தபோது, என்னுடைய மனைவி கோபித்துக்கொண்டு ஏதாவது முடிவு எடுத்திருந்தால் என்னுடைய நிலைமை என்னவாகியிருக்கும் நினைத்துப் பாருங்கள் - தாங்கிக் கொண்டு, பொறுமையாக இருந்து, எவ்வளவோ கொடுமைகள் எனக்கு வந்த நேரத்தில், என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்திய காரணத்தினால்தான் இன்றைக்கு நான் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன். அதுபோல தான் ஒவ்வொருவரும்.

அடுத்து, இங்கு இருக்கும் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க மினி ஸ்டேடியங்களை கட்டி இருக்கிறோம். தலைப்புச் செய்திகளாக சொல்ல வேண்டும் என்றால்,

- கொளத்தூரில் இருக்கும் ஏராளமான பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை எளிய வகையில் ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதற்காக, அரசு வேலை என்றால், அதில் சில விதிமுறைகள் எல்லாம் இருக்கிறது - உடனடியாக கிடைத்துவிடாது. காத்திருக்க வேண்டும் - ஏற்கனவே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இலட்சக்கணக்கானோர் பதிவு செய்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் தனிப்பட்ட முறையில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி 10வது, 11வது, 12வது படிக்கும் மாணவர்கள், முதல்வர் கல்விச் சோலை என்ற அந்தத் திட்டத்தையும் உருவாக்கி இன்றைக்கு இளைஞர்களுக்கெல்லாம் வேலை கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்திருக்கிறோம்.
- மேயர் சிட்டிபாபு மேம்பாலம்
- கௌதமபுரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு
- முத்துமாரியம்மன் கோயில் குளம்
- மார்க்கெட் தெரு பெண்கள் மேல்நிலைப் பள்ளி
- திரு.வி.க.நகர் பேருந்து நிலையம்
- எஸ்.ஆர்.பி.கோயில் வடக்குத் தெருவில் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் திருமண மண்டபம் - அந்த திருமண மண்டபத்திற்கு ஒரு பெரிய வரலாறு உண்டு. நான் முதன்முதலாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, ஆய்வு செய்தது அந்த மண்டபம் தான். பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது, சமூக நலக் கூடமாக கட்டப்பட்ட கட்டிடம். கட்டப்பட்ட கட்டிடமாக இருந்தாலும், அது பாழடைந்து, யாரும் பயன்படுத்தமுடியாத வகையில், சமூக விரோதிகள் எல்லாம் அதில் புகுந்து அசிங்கப்படுத்தும் நிலையில் தான் அது இருந்தது. அப்போது வந்த போது, மக்கள் எல்லாம் என்னிடம் வைத்த கோரிக்கை இதை எப்படியாவது சுத்தம் செய்து ஒரு நல்ல சமூகநலக் கூடமாக உருவாக்கித் தாருங்கள் என்று சொன்னார்கள். சமூகநலக் கூடமாக அல்ல - ஒரு திருமண மண்டப மாளிகையாக பெருந்தலைவர் காமராஜர் பெயரில் உருவாக்கப்பட்டது.
- பல்லவன் சாலை, ஜவகர் நகர் 1ஆவது வட்டச் சாலை, ரங்கசாமி தெரு, சீனிவாசா நகர் என்று பல்வேறு இடங்களில் விளையாட்டுத் திடல்கள் என்று கொளத்தூரில் திரும்பும் பக்கமெல்லாம், புதிய புதிய கட்டமைப்புகளை உருவாக்கியிருக்கிறோம்!

இதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு, 17 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஜி.கே.எம். காலனி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி மற்றும் பெரியார் நகர் அமுதம் அங்காடி ஆகியவற்றிற்கான திட்டப்பணிகளை தொடங்கி வைத்திருக்கிறோம்.

### கொளத்தூரில் மாநகராட்சி பள்ளிகள் அதிகம்!

கொளத்தூருக்கு ஒரு சிறப்புண்டு. நான் சில நேரங்களில், அனைத்து அமைச்சர்களிடமும் சொல்வதுண்டு. இன்றைக்கு மாநகராட்சி பள்ளியை எடுத்துக் கொண்டால், கொளத்தூரில் தான் அதிகம். மருத்துவமனையை எடுத்துக் கொண்டால், கொளத்தூரில் தான் அதிகம். நூல் நிலையங்களை எடுத்துக் கொண்டால், கொளத்தூரில் தான் அதிகம். அனைத்திலும் நாம் தான் அதிகம். இன்றைக்கு அந்த அளவிற்கு நம்முடைய திட்டங்கள், சாதனைகளை இந்த தொகுதிக்கு நாம் படைத்து வழங்கியிருக்கிறோம்.

அந்த மகிழ்ச்சியில், இந்த திருமண மாளிகையை திறந்து வைத்து, இன்றைக்கு இல்வாழ்க்கையை தொடங்கக்கூடிய ஒரு சிறப்பான நிகழ்ச்சியை நம்முடைய மணமக்களுக்கு உருவாக்கி இருக்கிறோம். 15 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைக்கப் போகிறோம். நீங்கள் எல்லாம் மனதார வாழ்த்த வேண்டும். குறிப்பாக நாம் ஆட்சிக்கு வந்த பிறகு பெண்களுக்கு தான் அதிகமான திட்டங்கள், சாதனைகள் படைத்துக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், பெண்களை படிக்க வைத்தால், பெண்கள் முன்னேறினால், அந்த குடும்பம் சிறப்பாக இருக்கும் என்ற அடிப்படையில் தான். பெண்களுக்கு முக்கியத்துவம் தருவதற்கு காரணம் என்னவென்று கேட்டால், பெண்கள் நினைத்தால் எதையும் செய்யக்கூடியவர்கள். அதனால் தான் பெண்களுக்கு அதிகமான முக்கியத்துவத்தைத் தந்து கொண்டிருக்கிறோம். இன்னும்கூட சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் தான் இருக்கிறார் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு.

### என் வெற்றிக்குப் பின்னால் என்னுடைய மனைவிதான் இருக்கிறார்!

என்னுடைய வெற்றிக்குப் பின்னாலும் என்னுடைய மனைவி தான் - நான் மட்டுமல்ல, சேகர்பாபுவாக இருந்தாலும் சரி, நேருவாக இருந்தாலும் சரி, இங்கு இருக்கக் கூடிய நீங்களாக இருந்தாலும் சரி.

ஓராண்டு காலம் நான் மிசாவில் இருந்தபோது, என்னுடைய மனைவி கோபித்துக்கொண்டு ஏதாவது முடிவு எடுத்திருந்தால் என்னுடைய நிலைமை என்னவாகியிருக்கும் நினைத்துப் பாருங்கள் - தாங்கிக் கொண்டு, பொறுமையாக இருந்து, எவ்வளவோ கொடுமைகள் எனக்கு வந்த நேரத்தில், என்னை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்திய காரணத்தினால்தான் இன்றைக்கு நான் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன். அதுபோல தான் ஒவ்வொருவரும்.

அதனால் தான் மணமக்களிடத்தில் நான் பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புவது, மனைவி சொன்னால், கேட்டுக் கொள்ள வேண்டும் அந்த நிலையில் நீங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். இன்னும் சிறிது நேரத்தில் மணவிழாவை நடத்தி வைக்கப் போகிறேன். மணமக்களை நான் அன்போடு கேட்டுக் கொள்ள விரும்புவது, அழகான குழந்தைகளை நீங்கள் பெற்றெடுக்க இருக்கிறீர்கள்.

முன்பெல்லாம் திருமண விழாக்களில் கலந்து கொண்டு பெரியோர்கள் மணமக்களை வாழ்த்தும்போது பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும் என்று சொல்வார்கள். இப்போது என்னவென்றால், பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்று சொல்வதை விட, அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்று சொல்கிறார்கள்.

முன்பெல்லாம், சிவப்பு முக்கோணம் போட்டு, நாம் இருவர் நமக்கு மூவர் என்று இருந்தது அது படிப்படியாக குறைந்து, நாம் இருவர் நமக்கு இருவர் என்று இருந்தது - இப்போது நாம் இருவர் நமக்கு ஒருவர் - நாளைக்கு இதுவும் மாறலாம் - நாம் இருவர் நமக்கு ஏன் இன்னொருவர் என்று சொன்னாலும் ஆச்சரியமில்லை.

பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழுங்கள் என்று ஏன் சொல்வதில்லை என்றால், மணமக்கள் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது என்பதால் தான். திரு. கி.ஆ.பெ.விஸ்வநாதன் அவர்கள் ஒருமுறை சொல்கின்றபோது சொன்னார் - பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் என்றால் மாடு, மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வயது, வாகனம், பொன், பொருள், போகம், புகழ் ஆகிய 16 செல்வங்களை பெற்று மணமக்கள் சிறப்போடு வாழவேண்டும் என்பதாகும்.

உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு, அழகான தமிழ்ப்பெயர்களை சூட்டுங்கள் என்று மணமக்களை அன்போடு கேட்டுக் கொண்டு, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லிய, வீட்டுக்கு விளக்காக நாட்டிற்குத் தொண்டர்களாக வாழுங்கள்! வாழுங்கள்! வாழுங்கள்! என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

100 நாள் வேலைத் திட்ட மசோதா பெயர் மாற்றம்!

## மக்களவையில் எதிர்க்கட்சிகள் கண்டனம்!

### மசோதா நகலை கிழித்து எறிந்து போராட்டம்!

புதுடெல்லி, டிச.19-

நூறு நாள் வேலை திட்ட மசோதா பெயர் மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மசோதாவின் நகலை கிழித்து எறிந்து 'இந்தியா' கூட்டணி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நூறு நாள் வேலை திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தியின் பெயரை ஒன்றிய பா.ஜ.க., அரசு நீக்கியுள்ளது. இதற்கு கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. நாடாளுமன்ற இருஅவைகளிலும் எதிர்க்கட்சிகள் மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. மக்களவையில் நூறு நாட்கள் வேலை திட்ட திருத்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்ற இந்தியா கூட்டணி கட்சிகள் ஒன்றிய அரசின் நடவடிக்கைக்கு கண்டனம் தெரிவித்தன.

மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக்குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தின. இதனை ஏற்க ஒன்றிய அரசு மறுப்பு தெரிவித்ததை அடுத்து இந்தியா கூட்டணி எம்.பிக்கள் மசோதா நகலை கிழித்து எறிந்து தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர். இதனிடையே குரல் வாக்கெடுப்பு மூலம் மசோதாவை ஒன்றிய அரசு நிறைவேற்றி உள்ளது.

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்திலும் இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். காங்கிரஸ் தலைவர்கள் சோனியாகாந்தி, மல்லிகார்ஜுன கார்கே, திக் விஜய் சிங், மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி எம்.பி., உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளின் எம்.பி.,க்கள் பேரணியாக நடந்து சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, நூறு நாள் வேலை திட்டத்தில் இருந்து மகாத்மா காந்தியின் பெயர் நீக்கப்பட்டதற்கு கடும் கண்டனம் தெரிவித்தனர்.

---

## ஏற்றுமதி பாதிப்பு: பிரதமருக்கு முதல்வர் கடிதம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பெருமளவில் தள்ளுபடிகளை வழங்கிட வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது அவர்களின் போட்டித்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைக் குலைக்கும் வகையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, இலட்சக் கணக்கான வேலைவாய்ப்புகள் பறிபோகும் நிலை உள்ளதாகவும், ஏற்களினவே இந்தத் துறைகள் பணி இழப்புகளையும், ஊதிய ஒத்தி வைப்புகளையும் சந்தித்து வருகின்றன என்றும், இது சமூகத்தில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தி அச்சுறுத்துவதாகவும் அவர் தனது கடிதத்தில் கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழ்நிலையை மேலும் மோசமாக்கும் வகையில், சர்வதேச இறக்குமதியாளர்கள், தங்களது ஆர்டர்களை, வியட்நாம், பங்களா தேஷ் மற்றும் கம்போடியா போன்ற நாடுகளிலுள்ள போட்டி யாளர்களிடம், அங்கு வரிவிதிப்பி னால் கிடைக்கும் நன்மையைக் கருத்தில் கொண்டு விரைவாக வழங்கி வருவதாகவும் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இதன் காரணமாக, சர்வதேச சந்தை வாய்ப்புகளை இழந்து, மீண்டும் வாய்ப்புகளைத் திரும்பப் பெறுவது என்பது பெருத்த சவாலாக இருக்கும் என்றும், இது நமது இளைஞர்களின், குறிப்பாக பெண்களின் எதிர்கால வேலை வாய்ப்புகளுக்கு அச்சுறுத்த லான, நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்து கிறது என்றும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழலில், இந்திய அமெரிக்க இருதரப்பு ஒப்பந்தம் மூலம் இந்த வரிச் சிக்கலை விரைவில் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், விரைவான தீர்வின் மூலமாக நமது ஏற்றுமதியாளர்களின் வணிக நிலையை மீட்டெடுப்பதோடு, உலக அளவில் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியாவின் நிலையை வலுப்படுத்திட இயலும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


எனவே, நிலையான வர்த்தகத்தை வளர்த்தெடுப்பதற்கும், உள்நாட்டு தொழில்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாப்பதற்கும் இந்தியப் பிரதமர் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் மீது நம்பிக்கையுடன் இருப்பதால், அமெரிக்க வரிவிதிப்பினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு விரை வில் தீர்வு காண வேண்டுமென தனது கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான்

## எஸ்.ஆர்.ஜி. ராஜண்ணா மறைவு!

### முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, டிச.19-**

**புகழ்பெற்ற நாதஸ்வர வித்வான் எஸ்.ஆர்.ஜி. ராஜண்ணா அவர்கள் மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**அன்னார் மறைவுற்ற செய்தியறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-**

செம்பனார்கோயில் சகோதரர்களில் இளைய வரும், புகழ்பெற்ற நாதஸ்வர வித்வானுமான எஸ்.ஆர்.ஜி. ராஜண்ணா அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்தினேன்.

தமது அண்ணன் எஸ்.ஆர்.ஜி. சம்பந்தம் அவர்களுடன் இணைந்து, 70 ஆண்டுகளுக்கும் மேலாக இசையுலகில் தனிப் புகழுடன் வலம் வந்தவர் ராஜண்ணா அவர்கள். தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள் ஆதீனங்கள், மயிலாடு துறை மாயூரநாத சுவாமி திருக்கோயில் உள்ளிட்ட பல முக்கிய ஆன்மீக நிலையங்களில் ஆஸ்தான வித்வானாகப் பணியாற்றிய சிறப்புக்குரியவர்.

உலகெங்கும் ஒலிக்கும் தமது இசையால் இசைபட வாழ்ந்தவர். கலைமாமணி உள்ளிட்ட பல உயரிய விருதுகளுக்குப் பெருமை சேர்த்தவர். அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கும், இசையுலக அன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.